பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

25 04 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மக்களவைக்கு இரண்டாவது கட்டமாக நாளை தேர்தல் நடைபெறவுள்ள 88 தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கான எற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2. மக்களவைக்கு நான்காவது கட்டமாக தேர்தல் நடைபெறும் 96 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

3. தடுப்பூசி உற்பத்தியில் இணைந்து செயல்பட இந்தியாவும் - நெதர்லாந்தும் முடிவு செய்துள்ளன.

4. உக்ரைன், இஸ்ரேல் மற்றும் தைவானுக்கு 95 பில்லியன் டாலர் நிதி உதவி வழங்க அமெரிக்கா அதிபர் திரு ஜோ பைடன் ஒப்புதல் அளித்துள்ளார்.

5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

மக்களவைக்கு இரண்டாவது கட்டமாக நாளை தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கான எற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

12 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 88 தொகுதிகளுக்கு நாளை வாக்குபதிவு நடைபெறுகிறது.

கேரளாவில் மொத்தம் உள்ள 20 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

கர்நாடகாவில் 14, ராஜஸ்தானில் 13, உத்திரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா எட்டு, மத்திய பிரதேசத்தில் ஆறு, அஸ்ஸாம் மற்றும் பீகாரில் தலா ஐந்து, மேற்குவங்கம் மற்றும் சத்திஷ்கரில் தலா மூன்று, திரிபுரா, மணிப்பூர் மற்றும் ஜம்மு-கஷ்மீரில் தலா ஒரு தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்த நிலையில், வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் பணி தொடங்கியுள்ளது.

இந்த தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும், வாக்குச்சாவடிகள் சி சி டி வி கேமரா மூலம் கண்காணிக்கப்படுவதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதனிடையே மூன்றாவது கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரடைந்துள்ளது.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிராவில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு எஸ் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இம்மாநிலத்தில் 8 தொகுதிகளில் நாளை வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

பீகாரில் பாகல்பூர், கதிஹார், பாங்கா, கிஷன்கஞ்ச், பூர்னியா ஆகிய ஐந்து மக்களவைத் தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும், பதற்றமான வாக்குச் சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதகாவும் அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு ஹெச் ஆர் ஸ்ரீனிவாசா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கர்நாடகாவில் 14 தொகுதிகளில் நாளை நடைபெறவுள்ள வாக்குப் பதிவுக்காக 30 ஆயிரத்து 602 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு மனோஜ் குமார் மீனா தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 19 ஆயிரத்து 701 வாக்குச்சாவடிகளும் வெப் கேமரா மூலம் கண்காணிக்கப்படும் என்று கூறினார்.

பாதுகாப்புப் பணியில் மாநிலத்தைச் சேர்ந்த 50 ஆயிரம் காவல்துறையினர், துணை ராணுவப் படைகளின் ஏழு கம்பெனிகள், மத்திய படைகளின் 65 கம்பெனிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அனல் காற்று எச்சரிக்கையைத் தொடர்ந்து தேவையான மருத்துவ உபகரணங்களுடன் மருத்துவப் பணியாளர்களும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளாக திரு மனோஜ் குமார் மீனா கூறினார்.

[]<<<>>>[]

ராஜஸ்தானில் நாளை 13 மக்களவைத் தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

டோங்க்-சவாய் மாதோபூர், அஜ்மீர், பாலி, ஜோத்பூர், பார்மர், ஜலோர், உதய்பூர், பன்ஸ்வாரா, சித்தோர்கர், ராஜ்சமந்த், பில்வாரா, கோட்டா மற்றும் ஜலாவார்-பரன் ஆகிய தொகுதிகளில் தேர்தல் நடைபெறுகிறது.

இந்த தொகுதிகளில் மொத்தம் 28 ஆயிரத்து 758 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு பிரவீன் குப்தா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணியில் ஒரு லட்சத்து 72 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் கூறினார்.

[]<<<>>>[]

கேரளாவில் உள்ள 20 மக்களவைத் தொகுதிகளிலும் நாளை ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜிவ் சந்திரசேகர், காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல் காந்தி உட்பட 194 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மாநிலம் முழுவதும் 25 ஆயிரத்து 358 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

[]<<<>>>[]

அஸ்ஸாமில் ஐந்து தொகுதிகளில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட தேர்தலில் 77 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரீம்கஞ்ச், டிமா ஹசாவோ மற்றும் கர்பி அங்லாங் மாவட்டங்களின் சில தொலைதூர பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கு தேர்தல் பணியாளர்கள் ஏறகனவே சென்றடைந்துள்ளனர்.

இதர பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கான தேர்தல் அலுவலர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் பிற பொருட்களுடன் இன்று செல்கின்றனர்.

[]<<<>>>[]

மக்களவைக்கு நான்காவது கட்டமாக தேர்தல் நடைபெறும் 96 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

ஒன்பது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இந்த தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

வேட்புமனுக்கள் நாளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 29-ஆம் தேதி கடைசி நாளாகும்.

நான்காவது கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 13-ஆம் தேதி நடைபெறுகிறது.

ஆந்திர மாநிலத்தில் மொத்தம் உள்ள 175 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று நிறைவடைகிறது.

ஒடிஸா மாநிலத்தில் முதல்கட்ட சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் 28 தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று முடிவடைகிறது.

**[]<<<>>>[]**

தடுப்பூசி உற்பத்தியில் இணைந்து செயல்பட இந்தியாவும் - நெதர்லாந்தும் முடிவு செய்துள்ளன.

அந்நாட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ள மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திரு அபூர்வசந்திரா, அங்கு முன்னணி தடுப்பூசி நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தியாவின் தடுப்பூசி உற்பத்தி குறித்து அப்போது அவர் எடுத்துரைத்தார்.

ஐரோப்பிய யூனியனில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

இந்த சந்திப்பின்போது இரு நாட்டு தடுப்பூசி நிறுவனங்களும், போலியோ உள்ளிட்ட நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் உற்பத்தியிலும் இணைந்து செயல்படுவது குறித்து திரு அபூர்வ சந்திரா ஆலோசனை மேற்கொண்டதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

உக்ரைன், இஸ்ரேல் மற்றும் தைவானுக்கு 95 பில்லியன் டாலர் நிதி உதவி வழங்க அமெரிக்கா அதிபர் திரு ஜோ பைடன் ஒப்புதல் அளித்துள்ளார்.

உக்ரைனுக்கு 61 பில்லியன் டாலரும், இஸ்ரேலுக்கு 26 பில்லியன் டாலரும், தைவானுக்கு எட்டு பில்லியன் டாலரும் வழங்க அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் சபை அனுமதி அளித்தது.

இதற்கான ஒப்புதல் ஆணையில் கையெழுத்திட்டப்பின், கருத்து தெரிவித்த திரு ஜோ பைடன், இது உலக அமைதிக்கான முக்கியமான நடவடிக்கை என்று கூறினார்.

முன்னதாக அமெரிக்க செனட் சபையில் இந்த மசோதாவுக்கு ஆதரவாக 79 வாக்குகளும், எதிராக 18 வாக்குகளும் பதிவாகின.

**[]<<<>>>[]**

கஜகஸ்தானில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் இன்று தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில் இந்தியா சார்பில் பாதுகாப்புத்துறை செயலர் திரு கிரிதர் அரமனே பங்கேற்கிறார்.

பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான முயற்சிககளை வலுப்படுத்துவது உறுப்பு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது உள்ளிட்டவை குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது.

**[]<<<>>>[]**

நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு வெப்ப அலை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா, மேற்குவங்கம், சிக்கிம் மற்றும் உள்கர்நாடகாவில் கடுமையான வெப்ப அலை நிலவ வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

பீகார், ஜார்க்கண்ட், கடலோர ஆந்திரா, தெலுங்கானா மற்றும் கிழக்கு உத்தரப்பிரதேசத்திலும் கடும் வெப்பம் நிலவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே நாட்டின் வடமேற்கு பகுதிகளில் சில இடங்களில் நாளை முதல் 28-ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் ஆய்வு மையம் கூறியுள்ளது.

வடகிழக்குப் பகுதிகளான அருணாச்சல பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம் மற்றும் திரிபுராவில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

திரிபுராவில் நிலவும் வெப்ப அலை காரணமாக வரும் 27-ம் தேதி வரை அனைத்து பள்ளிகளையும் மூட அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து அம்மாநில பள்ளிக் கல்வித்துறை செயலாளர் திரு என் சி சர்மா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளும் மூடப்படுவதாகத் தெரிவித்துள்ளார்,

இதனிடையே திரிபுராவில் வெப்பம் தொடர்பான அவசரகால செயல்பாட்டு மையங்களை திறக்கவும், மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கும் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யவும் மாவட்ட நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா நேற்று ஒரு தங்கம் மற்றும் மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் ஈட்டி போட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் தீபாங்ஸு சர்மா தங்கப்பதக்கம் வென்றார்.

மற்றொரு இந்திய வீரர் ரோஹன் யாதவ் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் வட்டு எறிதலில் ரித்திக்கும், ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் பிரியான்ஸூவும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தில்லி அணி நான்கு ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் நான்கு விக்கெட் இழப்புக்கு 224 ரன் எடுத்தது.

225 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி எட்டு விக்கெட் இழப்புக்கு 220 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

ஹைதராபாத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு – ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

***End of News***